[1990 மார்ச் 23

இராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் பிரதேசப் பரிசோதனை பிரிவு

†2105 திரு. மு. க. ஸ்டாலின் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் போஸ்ட் மார்ட்டம் பிரிவு செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

இராயப்பேட்டை மருத்துவ மனையில் பிரேதப் பரிசோத னைப்பிரிவு ஆரம்பிப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆயிரம்விளக்கு தொகுதியில் உள்ள இராயப்பேட்டை மருத்துவ மனையில் பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ள உள்துறை செய லகத்திலிருந்து முறையான ஜி. ஓ. அரசாணை வரவில்லையென்று சொல்லப்படுகிறது. எனவே, அரசு இது குறித்து உடனடியாக ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, 24—5—1989-ல் அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. உள்துறையில் இதுபோல் ஏதேனும் சங்கடங்கள் இருக்குமானால், உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று, அதை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செயயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வரதட்சணை கொடுமையால் நேரும் சாவுகளில் பிரேத பரிசோத னைக்கு இரண்டு டாக்டர்களைக் கொண்ட குழுவின் சார்பில் அறிக்கை தந்தால்தான் நீதி மன்றத்தில் அது எடுத்துக் கொள்ளப் படுகிறது. ஆனால், இராயப்பேட்டை மருத்துவமனையில் ஒரு டாக்டர் தான் இதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதுகுறித்து அரசுக்குத் தெரியுமா? இதுகுறித்து என்ன நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, அரசாணை மூலமாக ஒரு உதவி பேராசிரி யர் பதவியும், பரிசோதனைக்கூட தொழில் நுட்பாளர் பதவி ஒன் றும், பதிவு எழுத்தர் பதவி ஒன்றும், மருத்துவமனை பணியாளர் பதவி ஒன்றும், துப்புரவுப் பணியாளர் பதவி ஒன்றும் அரசின் மூலமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொண்டு மேலும் ஒரு மருத்

1990 மார்ச் 23]

துவரை நியமிப்பதற்கான கருத்துரு துறையிலிருந்து வருமானால், அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டிவனம் நகருக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***2297 டாக்டர் சி. ரா. மாசிலாமணி :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திண்டிவனம் நகருக்கு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தென் பெண்ணையாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் இவ்வாண்டு தொடங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

இல்லை.

[10-05 மணி)

டாக்டர் சி. ரா. மாசிலாமணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நகருக்குப் போடப்பட்டு இருந்த அந்த புளிச்சம்பள்ளி குடிநீர்த்திட்டம் எப்போது முடிவுறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டிருந்த கேள்வி, தென்பெண்ணையாற்றிலிருந்து திண்டிவனத்திற்கு குடிநீர் கொண்டு வருகிற திட்டம் இருக்கிறதா என்பது. அதற்கான பதிலை, இல்லை என்று அறிவித்து இருந்தேன். இருந்தாலும், இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற புளிச்சம்பள்ளி திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகள் வேகமாக செயல்பட்டுக் கொண்டு வருவதை உறுப்பினர் அவர்களே நன்றாக அறிவார்கள். எந்த அளவிற்கு விரைவாக செயல்படுத்த முடியுமோ, அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் சி. ரா. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரில் வாடிக்கையாக ஏற்படும் குடிநீர்த் தட்டுப்பாடு இந்த வருடம் சற்றுமுன்னதாகவே ஆரம்பித்து இருக்கிறது. இப்போது 3 நாட்களுக்கு ஒரு முறை தான் அங்கே குடிநீர் வழங்கப்படுகிறது. அதுவும் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குத்தான் தண்ணீர் கிடைக்கிறது. எனவே சென்ற ஆண்டு லாரிகள் மூலமாக தண்ணீர் வழங்கியதைப் போல, இந்த ஆண்டும் வழங்குவதற்கு அரசு நிதிநிலையை அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.